தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 298/2019 | சாட்சியம் | : | **MW1** |
| **Name** | : | திரு.சதிஷ்பாபு | | | |
| **Date** | : | **19.06.2026** | | | |
| **Time** | : | **11.48 a.m to 11.53 a.m** | | | |

நி.த.சா.**1.**திரு.சதிஷ்பாபு என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

03.06.2015 அன்று புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி என்ற பெயரில் ஒரு தொழிற்சங்கம் எங்கள் நிர்வாகத்தில் தொடங்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த தொழிற்சங்கத்தின் முன்னணி உறுப்பினராக மனுதாரர் இருந்தார் என்றால் உறுப்பினராக இருந்தார். அதன் பிறகு மனுதாரர் ஒன்றுபட்ட தொழிலாளர் கூட்டமைப்பு, தொழிலாளர் குழு, கிரீட்டோ இந்தியா தொழிலாளர் சங்கம் ஆகியவற்றிலும் உறுப்பினராக இருந்து வந்தார் என்றால் கிரீட்டோ இந்தியா தொழிலாளர் சங்கத்தில் இருந்ததாக தெரியவரவில்லை. புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி தொடங்கப்பட்ட பின்னர் தான் மனுதாரருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது என்றால் ஒழுங்கீன செய்கை அடிப்படையில் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மனுதாரருக்கு எதிராக இந்த வழக்கு சம்பந்தப்பட்ட

குற்றச்சாட்டு இல்லாமல் வேறு குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லை என்றால் எச்சரிக்கை கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது அந்த எச்சரிக்கை கடிதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை அவர் கொடுத்த மன்னிப்பு கடிதம் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நி.சா.ஆ.26 மன்னிப்பு கடிதம் கொடுக்கப்பட்ட பின்னர் தான் மனுதாரர் பணி நிரந்தரம் செய்யப்பட்டார் என்றால் ஆமாம். பணி நிரந்தரம் செய்து அவரின் மன்னிப்பை ஏற்றுக் கொண்டு விட்டதால் அந்த மன்னிப்பு கடிதம் இந்த வழக்கில் தாக்கல் எதையும் ஏற்படுத்தாது என்றால் தவறு. மனுதாரர் ஆர்.கே இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தில் வேலை செய்வதை காட்ட ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மனுதாரர் அது போன்று எந்த நிறுவனத்திலும் வேலை செய்யவில்லை என்றாலும் கற்பனையாக ஒரு நிறுவனத்தின் பெயரை நாங்கள் குறிப்பிட்டு அங்கு மனுதாரர் வேலை செய்து வருவதாக தவறாக சொல்லி உள்ளோம் என்றால் இல்லை. மனுதாரர் தொழிற்சங்கத்தின் முன்னணி நிர்வாகி என்ற காரணத்தினால் தொழிலாளர் விரோத போக்குடன் அவரை பணியில் இருந்து நீக்கி உள்ளோம் என்றால் தவறு. எங்கள் நிறுவனத்தில் இரவு பணியின்போது பிரேக் டைம் என்ன என்றால் உணவு இடைவேளை நள்ளிரவு 2 முதல் 2.30 மணி வரை.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by her to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:19.06.2026.